புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஜுலை 20, 2017 | புரட்சி 16 | முழக்கம் 27 | விலை: ரூ.3.00

## சென்னை விழாவில் பழ. கருப்பையா பேச்சு

# திராவிடர் இயக்கத்தின் பிள்ளை, காமராசர்





*சென்னையில் ஜுலை 15ஆம் தேதி திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய காமராசர் பிறந்த நாள் விழாவில் பங்கேற்றுப் பேசிய பழ. கருப்பையா, 'காமராசர் – திராவிடர் இயக்கத்தின் பிள்ளை' என்று கூறினார். பார்ப்பனரல்லாதார் இயக்கம் உருவாக்கிய எழுச்சியே காமராசரை காங்கிரஸ் தலைவராகவும் தமிழக முதலமைச்சராகவும் உயர்த்தியது என்றும் அவர் கூறினார். அவரது உரை :*

**கா**மராசர் பிறந்த நாள் விழாவை பெரியார் இயக்கங்கள் நடத்துவதுதான் மிகப் பொருத்தமானது. பெரியார் பெரிதும் மதித்த தலைவர் காமராசர். பெரியாரின் சமூகப் புரட்சி மகத்தானது. பார்ப்பனர் ஆதிக்கத்திலிருந்து பார்ப்பனரல்லாத மக்கள் விடுதலை பெற வேண்டும் என்பதே முக்கியம் என்று கருதிய பெரியார், அதற்காக இந்தியாவின் 'விடுதலை'கூட தள்ளிப் போகலாம் என்று முடிவெடுத்தார். அவர் அந்த சூழ்நிலையில் எடுத்த முடிவு சரியானது. 1976ஆம் ஆண்டு இந்தியாவில் அவசர நிலையை இந்திரா காந்தி அறிவித்து, அடிப்படை உரிமைகளையே பறித்தார். அப்போது காமராசர், "நாட்டைக் காப்போம்; ஜனநாயகத்தைக் காப்போம்" என்ற இயக்கத்தைத் தொடங்கினார். ஆனால், கெட்ட வாய்ப்பாக அவர் உயிருடன் இல்லை. அவர் உயிருடன் இருந்திருப்பாரானால் நாட்டில் ஆட்சி மாற்றமே நடந்திருக்கும். இன்றைய அரசியல் பொது வாழ்க்கை ஊழலும் கொள்ளையுமாக இருக்கிறது. ஆனால் காமராசர் அதற்கு முற்றிலும் மாறுபட்டவராக வாழ்ந்தார். அவரது வீட்டுக்கு அடிக்கடி செல்லும் மறைந்த காங்கிரஸ் தலைவர் கருத்திருமன், காமராசரிடம் உரிமை எடுத்துக் கொண்டு கிண்டலாகப் பேசுவார். "இன்றைக்கு உங்கள் வீட்டில் தான் எங்களுக்கு சாப்பாடு" என்று கூறுவார். "எனக்கே காங்கிரஸ் கட்சி தான் சாப்பாடு போடுகிறது; உனக்கு நான் எப்படிப்பா சாப்பாடு போட முடியும்?" என்று காமராசர் கேட்பார். தனது சட்டமன்ற உறுப்பினர் ஊதியம் உள்பட அனைத்து வருமானத்தையும் காங்கிரஸ் கட்சிக் கணக்கில் வரவு வைத்தவர் காமராசர். தனது தாயாருக்கு மாதந்தோறும் அனுப்பி வந்த சிறு தொகையைத் தவிர, தனக்கென்று தனிச் செலவு எதையும் காமராசர் வைத்துக் கொண்டதில்லை.

நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். காமராசர், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே தலைவராகவும் முதல்வராகவும் உயர முடிந்தது என்றால் அதற்கான அடிப்படை என்ன? அதற்கான காரணம் என்ன? பார்ப்பனரல்லாதார் இயக்கம் உருவாக்கி வைத்த எழுச்சி தான்/ (கைதட்டல்) 97 சதவீத மக்களை 3 சதவீத பார்ப்பனர்கள் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தபோது, நடேசனார், தியாகராயர், டி.எம்.நாயர் போன்ற தலைவர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தொடங்கினார்கள். அது ஒரு எதிர்மறைப் பெயர் என்பது உண்மைதான். பொத்தாம் பொதுவாக பார்ப்பனரல்லாதாருக்கான உரிமைக்காகக் குரல் கொடுத்தது அந்த இயக்கம். அது நீதிக்கட்சி என்று அழைக்கப்பட்டது. பெரியார் தலைமைக்கு நீதிக்கட்சி வந்தபோது பெரியாரும் அண்ணாவும் இணைந்து திராவிடர் கழகம் என்று பெயர் சூட்டி பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கு ஒரு ஆக்கப் பூர்வமான உருமாற்றத்தை வழங்கினார்கள். அந்த திராவிடர் இயக்கம்தான் இந்த மண்ணில் தமிழ் உணர்வையும் தமிழர் உணர்வையும் ஊட்டி வளர்த்தது. அந்தத் தாக்கம் காங்கிரசிலும் எதிரொலித்தது.

காங்கிரஸ் கட்சியில் பார்ப்பனர்களே தலைவர் களாக வரமுடியும் என்று இருந்த நிலைக்கு பார்ப்பனரல்லாதார் இயக்கம் உருவாக்கிய எழுச்சி கடும் நெருக்கடியை உருவாக்கியது. கட்சியின் 'குருக்களாக' இருந்த பார்ப்பனர்கள் அதற்குப் பிறகு நேரடியாக அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்ற நிலையில் தங்களது சீடர்களை களத்தில் இறக்கி விட்டனர். பார்ப்பனர் சத்தியமூர்த்தி, தனது சீடர் காமராசரையும் ராஜாஜி தனது சீடர் சுப்பையா என்பவரையும் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டியிட வைத்தார்கள். காமராசர்தான் மூன்று வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். திராவிடர் இயக்கம் உருவாக்கிய எழுச்சிதான் இதற்கு அடிப்படை. நான் உறுதியாகக் கூறுவேன், காமராசர் திராவிடர் இயக்கத்தின் பிள்ளை; திராவிடர் இயக்கத்தின் வித்து. (பலத்த கைதட்டல்)

ராஜாஜி குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தபோது காமராசரே நேரில் சந்தித்து திட்டத்தைக் கைவிடக் கோரினார். ராஜாஜி மறுத்தார். "நீ பெரியார் பேச்சைக் கேட்டு செயல்படுகிறாய்; திட்டத்தை கைவிட மாட்டேன்" என்றார்.

வட மாநிலங்களிலே மதத்தின் அடிப்படையில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் என்று சமூகத்தை பிளவுபடுத்தி, மத மோதல்களை உருவாக்கியதுபோல் தமிழ்நாட்டில் உருவாக்க முடியாததற்கு காரணம் என்ன? இங்கே தமிழ், தமிழர் என்ற உணர்வும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற உணர்வும் மேலோங்கி நின்றதுதான் காரணம். அந்த மாற்றத்தைக் கொண்டு வந்தவர் பெரியார்.

பிரெஞ்சு நாட்டில் பிரெஞ்சுப் புரட்சி நடந்த காரணத்தினால்தான் நெப்போலியன் அதிகாரத் துக்கு வர முடிந்தது. அதேபோல் திராவிடர் இயக்கம் உருவாக்கிய சமுதாய எழுச்சியினால்தான் காமராசர் அதிகாரத்துக்கு வர முடிந்தது. திராவிட இயக்கம் தமிழர் என்ற உணர்வை ஊட்டி, சமூகத்தை ஒருமைப் படுத்தியதால்தான் இப்போதும் பா.ஜ.க. தனது மத வழிக் கொள்கைகளைத் திணிப்பதில் வெற்றி பெற முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. அதனால் தான் திராவிட இயக்கத்தை ஒழித்தாக வேண்டும் என்று அவர்கள் தீவிரமாக செயல்படுகின்றார்கள்.

நான், ஜெயலலிதாவின் அதிமுகவை திராவிட

(4ஆம் பக்கம்)

## வரலாற்றுச் செய்திகளைப் பகிர்ந்த காமராசர் விழா

*சென்னை இராயப்பேட்டை வி.எம்.சாலையில் காமராசர் பிறந்த நாளான ஜுலை 15ஆம் நாள் மாலை 5.30 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் காமராசர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. விழாவையொட்டி காமராசர், பெரியார் படங்களும் அவர்களின் கருத்துகளோடு பதாகைகளாக வைக்கப்பட்டிருந்தன. "பள்ளிகளில் கடவுள் வாழ்த்துப் பாடுவதற்கு பதிலாக காமராசர் வாழ்த்துப் பாட வேண்டும்" என்ற பெரியாரின் கருத்து அனைவரையும் ஈர்த்தது. 'விரட்டு பண்பாட்டுக் கலைக் குழு'வினரின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. காமராசர், அம்பேத்கர், பெரியார் மற்றும் ஜாதி ஒழிப்பு, பெண்ணுரிமைப் பாடல்கள், பறை இசை, இடஒதுக்கீட்டை வலியுறுத்தும் நாடகங்கள் என்று இரண்டரை மணி நேரம் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. மாவட்ட செயலாளர் உமாபதி வரவேற்புரையாற்றினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'காமராசரின் இன்றைய தேவை' எனும் தலைப்பிலும், பழ.கருப்பையா 'காமராசரின் சமூக நீதிப் புரட்சி' எனும் தலைப்பிலும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி 'காமராசரும் பெரியாரும்' எனும் தலைப்பிலும் உரையாற்றினர். பொது மக்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டு இறுதி வரை கருத்துகளையும் கலை நிகழ்ச்சிகளையும் செவிமெடுத்தனர். காமராசர் குறித்த ஏராளமான வரலாற்றுத் தகவல்களை கருத்தாளர்கள் விளக்கிப் பேசினர்.*

# தமிழில் திருமுறை பாட இலஞ்சம் கேட்கும் தில்லை தீட்சதர்கள்

சர்ச்சைகள் அடிக்கடி உருவாகும் இடம் சிதம்பரம் நடராஜர் கோயில். தேவாரம் திருவாசகம் ஏடுகளைப் பூட்டிவைத்துக் கொண்டு தர மறுத்தார்கள், நந்தனாருக்கு கோயிலுக்குள் நுழையத் தடை போட்டார்கள், ஆறுமுகசாமியை தேவாரம் பாட விடாமல் தடுத்தார்கள். இப்படி தொடர் சர்ச்சைகளில் சிக்கி வந்த தில்லையம்பதி இப்போது, 'திருமுறைகளைப் பாடத் தடை' என்ற புதுச் சர்ச்சைக்குள் சிக்கியிருக்கிறது.

சிதம்பரம் நடராஜர் கோயிலின் மேலக்கோபுர வாசல். இந்த வழியாக கோயிலுக்குள் நுழையும் இடம் அருகே தான் திருமுறைகள் கண்டெடுக்கப்பட்டதாக சொல்லப் படுகிறது. இவ்விடத்தில், தீட்சிதர்கள் அனுமதியுடன் தினமும் திருமுறை ஓதும் நிகழ்ச்சி கடந்த 2014 ஜனவரி 12இல் தொடங்கியது. தில்லை திருமுறை மன்றத்தால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வானது தினமும் மாலை 5 மணிக்கு தொடங்கி இரவு 8 மணி வரை நடைபெற்று வந்தது. இந்த நிகழ்வில், திருமுறை ஒரு பதிகம் கூறி அதற்கான விளக்கமும் சொல்லப்படும். அப்படி இதுவரை கடந்த மூன்று ஆண்டுகளில் 9 திருமுறைகள் ஓதி முடிந்து, பத்தாவது திருமுறையில் திருமந்திரத்தில் நான்காம் மந்திரம் வரை முடிவடைந்துள்ளது. இந்த நிலையில், கடந்த பிப்ரவரி 15ஆம் தேதியிலிருந்து இங்கே திருமுறைகள் ஓதும் நிகழ்ச்சி திடீரென நிறுத்தப்பட்டுவிட்டது.

இதையடுத்து, நடராஜர் கோயிலுக்குள் திருமுறைகளைப் பாட தீட்சிதர்கள் தினமும் 5,000 ரூபாய் கேட்கிறார்கள் என்றும், பணம் தராததால் தொடர்ந்து திருமுறைகளைப் பாட தடைவிதித்து விட்டார்கள்.

இதுகுறித்து பேசிய தில்லை திருமுறை மன்றத்தின் தலைவர் முருகையன், "திருமுறைகள் ஓதும் நிகழ்ச்சியை நடத்த நடராஜர் கோயில் நிர்வாகத்துக்கு 150 ரூபாய், திருமுறை ஓதுவாருக்கு 200 ரூபாய், திருமுறை விளக்க உரை அளிப்பவர்களுக்கு 200 ரூபாய், நடராஜர் கோயில் பூஜை ஆச்சாரியாருக்கு 100 ரூபாய், இவற்றோடு இதர செலவுகளையும் சேர்த்து தினமும் 1,000 ரூபாய் செலவானது. திருமுறை மீது பக்தி கொண்ட அன்பர்களின் நன்கொடைகளைக் கொண்டு இதைச் சமாளித்தோம்.

இந்நிலையில், திருமுறை ஓதும் நிகழ்ச்சியை நடத்த தினமும் 5,000 ரூபாய் வேண்டும் என தீட்சிதர்கள் தரப்பில் திடீரெனக் கேட்டனர். எங்களால் அவ்வளவு பெரிய தொகையைத் தருவது சாத்தியமில்லை என்று சொன்னதும், நிகழ்ச்சியை நடத்த அனுமதிக்கவில்லை. அதனால், நிகழ்ச்சி பாதியிலேயே தடைபட்டு நிற்கிறது. பணம் இல்லாமல், வழக்கம் போல மீண்டும் நிகழ்ச்சியை நடத்த அனுமதி கேட்டுள்ளோம். அவர்கள் அனுமதிக்காத பட்சத்தில் தமிழகம் முழுவதும் உள்ள திருமுறை சிவனடியார்கள் மற்றும் பக்தர்களைத் திரட்டி சிதம்பரத்தில் பெரிய அளவில் போராட்டம் நடத்துவோம்" என்றார்.

இது குறித்து நடராஜர் கோயில் பொது தீட்சிதர்கள் சபாவைச் சேர்ந்த வெங்கடேச தீட்சிதரிடம் கேட்டபோது - "திருமுறை விளக் கம் ஓதுதல் நிகழ்ச்சியை ஒரு வருட காலத்துக்கு மட்டுமே நடத்த அனுமதி வழங்கப்பட்டது. ஆனாலும் தொடர்ந்து மூன்று ஆண்டு களுக்கும் மேலாக அந்த நிகழ்ச்சி எந்தத் தடையும் இல்லாமல் நடைபெற்று வந்தது.

அதேசமயம், கோயிலின் உள்ளே மைக்செட் வைத்து ஒலிபெருக்கி மூலம் நிகழ்ச்சியை நடத்துவதால் பக்தர்களுக்கும் கோயிலின் மற்ற நிகழ்வுகளுக்கும் இடையூறுகள் ஏற்பட்டு வந்தன. இதைத் தவிர்ப்பதற்காக, மைக்செட் இல்லாமல் நிகழ்ச்சியை நடத்திக் கொள்ளுங்கள் என்று எங்கள் தரப்பிலிருந்து திருமுறை மன்றத்தாருக்குச் சொல்லப்பட்டது. இதை வேறு மாதிரியாகத் திரித்துவிட்டார்கள் என்கிறார்.

## தொட்டிப் பாலத்துக்கு காமராசர் பெயர் சூட்ட கழகம் கோரிக்கை

திராவிடர் விடுதலைக் கழகம், குமரி மாவட்டம் சார்பாக கல்வி வள்ளல் காமராசர், சாதி ஒழிப்பு போராளி இரட்டை மலை சீனிவாசன் ஆகியோரின் பிறந்த நாள் தெருமுனைப் பரப்புரைக் கூட்டம் பள்ளியாடி சந்திப்பில் 15-07-2017 சனிக்கிழமை மாலை மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் வே.சதா தலைமையில், பள்ளியாடி சி.இளங்கோ முன்னிலையில் கழகப் பெரியார் பிஞ்சு ஆர்மலின் கடவுள் மறுப்பு வாசகத்துடன் துவங்கியது. கழகத் தோழர் தக்கலை விஸ்ணு வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தமிழ் மதி, பெரியார் தொழிலாளர் கழக மாவட்டத் தலைவர் நீதி அரசர், தமிழ் நாடு அறிவியல் மன்ற மாவட்டத் தலைவர் மணிமேகலை,இந்திய புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர், ஜெயன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சிறப்புப் பேச்சாளராக மதிமுக மாநிலப் பேச்சாளர் அனல் கண்ணன் "காமராசரும் பெரியாரும்" என்றத் தலைப்பில் உரையாற்றினார். நிகழ்வில் மாவட்ட பொருளாளர் மஞ்சுகுமார், பெரியார் தொழிலாளர் கழக மாவட்டச் செயலாளார் ஜாண் மதி, முன்னாள் மாவட்டத் தலைவர் சூசையப்பா, தோழர்கள் சாந்தா, இராஜேஸ் குமார், சுனில் குமார், ஜார்ஜ் ஸ்டீபன் ஆகியோர் கலந்துக் கொண்டனர். இறுதியாக கழகத் தோழர்.தக்கலை அனிஸ் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

இக்கூட்டம் இரு கோரிக்கைகளை அரசுக்கு வைத்தது.

மாத்தூர் பகுதியில் இரு மலைகளுக்கிடையில் தண்ணீரைக் கொண்டுச் செல்வதற்கு வசதியாக ஆசியாவிலேயே உயரமான தொட்டிப் பாலத்தை காமராசர் கட்டினார். இன்று சுற்றுலாத் தலமாகவும் இருக்கிறது. ஆனால் அதைக் கட்டிய காமராசரின் நினைவாக அவ்விடத்தில் எதுவுமில்லை.



1. தமிழக அரசு அத்தொட்டிப் பாலத்திற்கு "காமராசர் மாத்தூர் தொட்டிப் பாலம்" என்று பெயரிடவும்,
2. அப்பகுதியில் அவரின் முழு உருவச்சிலையை வைக்க வேண்டுமெனவும் கோரிக்கை வைக்கப்பட்டது.

கூட்டம் துவங்குவதற்கு முன்பு பகுத்தறிவுத் துண்டறிக்கைகள் பள்ளியாடி பகுதி முழுவதும் இளங்கோ தலைமையில் கழகத் தோழர்களால் வழங்கப்பட்டது.

## திருச்செங்கோட்டில் கழக சார்பில் 'கக்கூஸ்' ஆவணப் படம் திரையீடு



நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக திருச்செங்கோடு பெரியார் மன்றத்தில் கடந்த வாரம் ஜீலை 2ஆம் தேதி, தோழர் திவ்யபாரதி இயக்கிய கக்கூஸ் ஆவணத் திரைப்படம் திரையிடப்பட்டது. இந்த நிகழ்வில் நாமக்கல் மாவட்ட செயலாளர் மு.சரவணன், நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் மா.வைரவேல், நாமக்கல் மாவட்ட பொருளாளர் அ.முத்துப்பாண்டி மற்றும் திருச்செங்கோடு, பள்ளிபாளையம் பகுதியைச் சேர்ந்த கழக பொறுப்பாளர்கள் மற்றம் தோழர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு முடிந்தவுடன் "நிமிர்வோம்" குறித்த கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது. இதையடுத்து இந்த ஆவணப்படத்தை பொதுமக்களிடம் கொண்டு செல்லும் வகையில் 09.07.2017 அன்று திருச்செங்கோடு, கருவேப்பம்பட்டி, குதிரைப்பள்ளம் பகுதியில் பொதுமக்கள் மத்தியில் திரையிடப்பட்டது. கருவேப்பம்பட்டி பகுதி மணி இந்நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

## விருத்தாசலம் ஒன்றியத்தில் 20 தோழர்கள் கழகத்தில் இணைந்தனர்

விருத்தாசலம் ஒன்றியம் கருவேப்பிலங்குறிச்சி அருகில் உள்ள பேரளியூர் கிராமத்தில் திராவிடர் விடுதலை கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் மிக சிறப்புடன் நடைபெற்றது. காலை 11.00 மணிக்கு துவங்கிய கூட்டத்துக்கு கடலூர் மாவட்ட தலைவர் நட. பாரதிதாசன் தலைமை தாங்கினார். ஆசிரியர் அறிவழகன் மற்றும் கோபால் இராமகிருட்டிணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முருகன்குடி ஆசிரியர் பழனிவேல் சிறப்புரை ஆற்றினார். இருபதுக்கும் மேற்பட்ட தோழர்கள் கழகத்தில் புதிதாக இணைந்தனர். தோழர்கள் அறிமுகத்துக்குப் பின் ஆசிரியர் பழனிவேல் பெரியார் அம்பேத்கர் கொள்கைகளைப்பற்றியும் திராவிட இயக்கங்களின் போராட்டங்களைப்பற்றியும் இரண்டு மணி நேரம் சிறப்பாக உரையாற்றினார். முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன .

1. ஆசிரியர் அறிவழகன் வழிகாட்டுதலின் பேரில் செயல்படுவது; பயிற்சி முகாம் நடத்திய பின் தலைமையின் பொறுப்பாளர்கள் அறிவிக்கப் படுவார்கள்; 2. விரைவில் பயிற்சி முகாம், அதைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது 3. கிராமப்புறங்களில் சாதி ஒழிப்பு மற்றும் பிரச்சார கூட்டங்கள் நடத்துவது 4. பெரியார் சிந்தனைப்பலகை அமைத்து தினமும் சிந்தனைகளை எழுதுவது 5. பெரியார் படிப்பகம் அமைத்தல் 6. சமூக சிந்தனைகளை தூண்டும் குறும் படங்களை திரையிடுவது 7. பள்ளிகளில் பகுத்தறிவை வளர்க்கும் அறிவியல் நிகழ்ச்சிகள் நடத்துவது 8. வெள்ளாறு மணல் குவாரி எதிர்ப்புக்கு முழு ஆதரவு அளிப்பது 9. சமுதாயக்கூடம் அமைக்க வலியுறுத்துதல் 10. இளைஞர்களுக்கு விளையாட்டு மற்றும் உடல் திறன் வளர்க்க மைதானம் அமைக்க அரசைக் கோருதல் 11. பழுதடைந்த தொட்டியை அகற்றிவிட்டு புதிய குடிநீர் தொட்டி அமைக்க மனு அளிப்பது 12. நீண்ட காலமாக கிடப்பில் போடப்பட்ட இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்திப்பது - ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன .

கூட்டத்தில் அரியலூர் மாவட்டபொறுப்பாளர் கோபால் இராமகிருட்டிணன் மற்றும் கடலூர் மாவட்ட தோழர்கள் சிலம்பரசன், சுரேந்தர் மற்றும் மணிகண்டன் ஆகியோரும் பங்கேற்றனர்.

# காமராசர் விழா நிகழ்வில் அமைதியாக கடந்து சென்ற “சாமி ஊர்வலம்”




சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக செயலாளர் இரா. உமாபதி, வரவேற்புரையில் காமராசர் விழாவுக்கு பகுதி வாழ் வணிகர்கள் காட்டிய பேராதரவையும் விழாவுக்கு கடந்த 10 நாள்களாக ஒவ்வொரு பகுதியாக கடைகளில் துண்டறிக்கை வழங்கி, சிறு சிறு தொகையாக நன்கொடை திரட்டிய கழகத் தோழர்களின் களப் பணியையும் சுட்டிக் காட்டி உரையாற்றினார்.

“இந்த விழா இவ்வளவு சிறப்புடன் நடைபெறுவதற்கு இப்பகுதியில் உள்ள வணிகர்கள் நன்கொடைகளை வழங்கினர். எங்களுடைய பெரியார் படிப்பகம் அருகில் அடுத்தடுத்து, நாகாத்தம்மன், விநாயகன் கோயில்களும், இராமலிங்கசாமி கோயிலும் இருக்கின்றன. கோயில் நிர்வாகிகளும் கோயிலுக்கு வரும் பக்தர்களும் எங்களிடம் நட்பு பாராட்டுகின்றனர். இந்தக் கோயில்களுக்கிடையே படிப்பகக் கரும் பலகையில் ஒவ்வொரு நாளும் நாங்கள் எழுதும் பெரியார் சிந்தனைகளைப் படிக்கிறார்கள். ஒரு நாள் கோயிலுக்கு வந்த அம்மையார் ஒருவர், “இங்கே நீங்கள் எழுதும் கருத்துகளை ஒவ்வொரு நாளும் படிக்கிறேன். எனக்கு நியாயமாகவே தெரிகிறது. எனக்கு பெரியார் நூல்கள் வேண்டும்” என்று கேட்டார். “நாங்கள் நூல்களை விற்பதில்லை; படிப்பகத்திலேயே அமர்ந்து படிக்கலாம்” என்று கூறினோம். உடனே ஆயிரம் ரூபாயைக் கொடுத்து “எனக்கு பெரியார் நூல்களை வாங்கித் தாருங்கள்” என்று கூறினார். அதற்குப் பிறகு கோயில் பக்கமே நாங்கள் அவரை பார்க்கவில்லை. இங்கே அருகிலுள்ள எல்லா கோயில்களிலும் பக்தர்களுக்காக தயாரிக்கும் உணவை எங்கள் தோழர்களுக்கு அனுப்பி வைப்பது வழக்கம். இப்போது நாகாத்தம்மாள் கோயிலில் ஆடித் திருவிழா தொடங்கி நடக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒலிபெருக்கியில் பக்திப் பாடல்கள் ஒலிக்கும். இன்று நமது கழகக் கூட்டம் நடப்பதால் ஒலிபெருக்கியை நிறுத்தி விட்டோம் என்று கோயில் நிர்வாகிகள் கூறினார்கள். (பலத்த கைதட்டல்) கூட்டம் நடக்கும் இடம் வழியாக ‘சாமி’ ஊர்வலம் மட்டும் வரும் என்று கேட்டுக் கொண்டார்கள். தாராளமாக வரட்டும் என்று நாங்கள் கூறினோம். இந்தக் கோயில்களில் நிர்வாகிகளாக அர்ச்சகர்களாக இருப்போர் அனைவருமே நமது மக்கள் தான்; ‘சூத்திரர்’கள்தான். எங்களுக்கு கடவுள், மத நம்பிக்கையில்லை என்றாலும், நல்ல உறவைப் பேணி வருகிறோம்” என்று கூறி, நன்றி தெரிவித்தபோது, கூட்டத்தினர் பலத்த கரவொலி எழுப்பி வரவேற்றனர்.

பழ. கருப்பையா பேசிக் கொண்டிருந்த போது கூட்டத்தின் வழியாக சாமி ஊர்வலம் வந்தது. மேளம் வாசிப்பதை நிறுத்திக் கொண்டார்கள். கழகத் தோழர்களே சாமி ஊர்வலம் செல்ல ஏதுவாக வழியமைத்து உதவினார்கள்.

பெரியார் இயக்கம் தமிழ்நாட்டில் நீண்டகாலமாக கட்டிக் காத்து வரும் சீரிய பண்பாடு இது. விவாதங்களும் உரையாடல்களாகவுமே - இங்கே கருத்து மோதல்களாக நடந்திருக்கின்றன. ஆனால் அண்மைக்காலமாக தமிழகத்தில் காலூன்ற துடிக்கும் காவி பயங்கரவாத சக்திகள் ‘பகையை - வெறுப்பை’ உமிழ்ந்து மோதல் களமாக்கி தமிழகத்தின் தனித்துவத்தை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் இந்த வெறுப்பு அரசியலை ஒரு போதும் ஏற்க மாட்டார்கள் என்பது மட்டும் உறுதி.

**– நமது செய்தியாளர்**

# திருப்பூரில் எழுச்சியுடன் நடந்த காமராசர் விழா






**திருப்பூரில் காவல்துறை ஒலி பெருக்கியை சரியாக இரவு 10 மணிக்கு துண்டித்தது. அதன் பிறகு ஒலிபெருக்கி இல்லாமலேயே கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசிய காட்சி**

திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய “பெருந் தலைவர் காமராசர் பிறந்தநாள் விழா - பொதுக் கூட்டம்” 16.07.2017 அன்று மாலை 5 மணியளவில் திருப்பூர் இடுவம்பாளையம் பகுதியில் தெற்கு பகுதி செயலாளர் மா இராமசாமி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கமாக பள்ளத்தூர் நாவலரசு கலைக் குழுவினர் சமூக நீதி பாடல்களை பாடி மக்களை எழுச்சியூட்டினர்.

அதன் தொடர்ச்சியாக, திருப்பூர் மாவட்ட செயலாளர் நீதிராசன் மற்றும் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் “கல்விவள்ளல் காமராசரின் வரலாறு மற்றும் தற்கால நீட் தேர்வு சீரழிவு” பற்றி சிறப்பாக பேசினார்.

முகில்ராசு (திருப்பூர் மாவட்ட தலைவர்) பொதுக் கூட்டத்திற்கான தொடர் களப்பணியில் ஈடுபட்ட தோழர்களை பாராட்டி, பொதுக்கூட்டத்திற்கு சிறப்புரையாற்ற வந்திருந்த பேச்சாளர்களை வரவேற்றும், பொதுக் கூட்டத்திற்காக உதவிய பகுதி மக்களுக்கு நன்றி கூறியும் நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஒருங்கிணைத்தார். காவை இளவரசன், ‘மந்திரமல்ல, தந்திரமே’ நிகழ்ச்சி, 30 நிமிடங்கள் பார்வையாளர்களை கட்டிப் போட்டு, பகுத்தறிவு கருத்துகளை பரப்பியது.

அதன்பின் தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் வீ. சிவகாமி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் சபரி, மடத்துக்குளம் மோகன், தனபால் ஆகியோர் காமராசரின் பொற்கால ஆட்சியை பொது மக்களுக்கு நினைவுப் படுத்தினார்கள். பொருளாளர் திருப்பூர் துரைசாமி இரத்தின சுருக்கமாக காமராசரின் ஆட்சித் திறனையும் கல்விப் பணிகளையும் விதந்தோதி மக்களை சிந்திக்க வைத்தார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெரியார்-காமராசர் கொள்கை உறவுகளை விரிவாக விளக்கினார்.

காவல் துறை 10 மணிக்கு கண்டிப்பாக பொதுக் கூட்டத்தை நிறுத்தச் சொன்னதால், கழக தலைவர் கொளத்தூர் மணி ஒலிபெருக்கியை நிறுத்திவிட்டு உரையாற்ற ஆரம்பித்தார். வழிபாட்டு நிலையங்களிலும் இது போன்றதொரு போக்கினை பின்பற்ற காவல்துறைக்கு வேண்டுகோள் விடுத்து மேடைக்கு விளிம்பில் நின்று தன் உரையை தொடர்ந்தார். பொதுமக்களும் உரையை மேடைக்கு அருகில் வந்து ஆர்வமுடன் கேட்டார்கள். 15 நிமிடங்களுக்கு மேலாக விறுவிறுப்பான செய்திகளோடு திருப்பூரில் கல்வி வள்ளல் காமராசர் 115வது பொதுக்கூட்டம் சிறப்பாக நடந்து முடிந்தது

**செய்தி: க. விஜய்குமார்**

## இந்து அறநிலையத்துறை பெயரை மாற்ற வேண்டும்

“மற்றொரு கருத்தையும் நான் சொல்லியாக வேண்டும். ‘இந்து’ என்று ஒரு மதமே கிடையாது. அது ஒரு கலவைச் சொல். சிந்து நதிக்கரைக்கு அப்பால் வாழ்ந்த மக்களின் இடத்தைக் குறிக்க - ஆப்கானிஸ்தான், பாரசீக நாடு இஸ்லாமியர்கள் பயன்படுத்திய ‘இந்து’ என்ற சொல்லை பிரிட்டிஷ்காரன் அப்படியே ஏற்றுக் கொண்டான். நமக்கு ‘சிவ மதம், வைணவ மதம், ஆசிவக மதம்’ என்று மதங்கள் இருக்கிறதே தவிர, இந்து மதம் என்று ஒரு மதம் கிடையாது. எனவே தான் ‘இந்து அறநிலையத் துறை’ என்ற பெயரையே ‘திராவிட அறநிலையத் துறை’ என்று மாற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்தி வருகிறேன். நான் கடவுள் நம்பிக்கையுள்ளவன்; உங்களுக்கு அந்த நம்பிக்கை இல்லை; நம்பிக்கையாளர்களுக்கான மதம் திராவிட மதமாக இருக்க வேண்டும் என்று சொல்கிறேன். தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது இந்தக் கருத்தை நாம் வலியுறுத்த வேண்டும்.

**– பழ. கருப்பையா உரையிலிருந்து**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# வேதத்தைப் போற்றிய பார்ப்பன பாரதி

(முதல் பக்கத் தொடர்ச்சி)




இயக்கம் என்று கூற மாட்டேன். அது ஆரிய தி.மு.க. அந்தக் கட்சியில் நான் 5 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்தேன். கலைஞர் தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவித்து, திருவள்ளுவர் ஆண்டை தமிழருக்கான ஆண்டாக அறிவித்தார். ஜெயலலிதா முதல்வராக வந்த பிறகு அதை மாற்றினார். அதற்காக ஜெயலலிதாவுக்கு அரசு சார்பில் நடத்திய பாராட்டு விழாவில் பங்கேற்க என்னை அழைத்தார்கள். அந்தக் கூட்டத்தில் நான் இதை எதிர்த்துப் பேசினேன். “நீங்கள் சித்திரையைக் கூட தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கமாக வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் 60 ஆண்டு சமஸ்கிருத ஆண்டுக் கணக்கை விட்டொழியுங்கள். திருவள்ளுவர் ஆண்டுக்கணக்கைப் பின்பற்றுங்கள். 60 ஆண்டு சமஸ்கிருதக் கணக்கு தமிழருக்கான அடையாளம் அல்ல” என்று பேசினேன். அப்போது ஜெயலலிதா மேடைக்கு வரவில்லை. பிறகு வந்தபோது நான் பேசியதை அதிகாரிகள் கூறக் கேட்டு கொதித்துப் போனார். எனது பேச்சை அரசிதழில் வெளியிட வேண்டாம் என்று தடை போட்டார். தமிழர்களின் ஆண்டுகளாக பின்பற்றப்படும் குழப்பத்தை உருவாக்கும் 60 ஆண்டு சமஸ்கிருதப் பெயர்களைக் கொண்ட முறையை நாம் விட்டொழிக்க வேண்டும். பெரியார் எப்படி ஆட்சிக்குப் போகாமலேயே சமூகத்தை மாற்றியமைக்கும் அதிகாரத்தை உருவாக்கிக் கொண்டாரோ அதுபோல் நாம் செயல்படவேண்டும்.

பெரியார் இயக்கமாக தி.க. தலைவர் வீரமணி, கொளத்தூர் மணி, கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் போன்றவர்கள், அதிகாரப் பற்று இன்றி, பெரியார் கொள்கைக்காக உழைக்கிறார்கள் என்பதால் நான் அவர்களை எல்லாம் மிகவும் மதிக்கிறேன். ஒரு கட்டத்தில் நான்கூட நினைத்தேன், பெரியார் எந்த நோக்கத்துக்காக இயக்கத்தை உருவாக்கினாரோ அதன் தேவை அநேகமாக முடிந்துவிட்டது. எனவே அந்த இயக்கத்துக்கான தேவை இல்லை என்று நினைத்தேன். ஆனால் இப்போது உணருகிறேன். பெரியார் இயக்கம் முன்னெப் போதும் இருந்ததைவிட இன்னும் வலிமையோடு இயங்கவேண்டிய அவசியமிருக் கிறது என்று இப்போது உணருகிறேன். (கைதட்டல்)

### பாரதியும் பாரதிதாசனும்

என்னைப் பொறுத்த வரையில் பரிதிமாற் கலைஞர் என்ற பார்ப்பனரைத் தவிர வேறு எந்த பார்ப்பனரும் தமிழை, தமிழர் உணர்வை மதிப்பவராக நான் கருதவில்லை. பாரதியைக் கூட நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். பாரதி நல்ல கவிஞன் என்பது வேறு; அவன்தான் இந்து மதத்தைப் புகழ்ந்து பாடினான்; பாரத மாதாவைப் பாடினான். பாரத மாதாவுக்கு திருப்பள்ளி யெழுச்சி பாடியவன் பாரதி. பாரத மாதாவுக்கு தமிழகத்தில் என்ன வேலை ? நாங்கள் தமிழ்த் தாய் என்ற ஒரு தாய்க்குப் பிறந்தவர்கள். நாங்கள் எப்படி பாரத மாதாவுக்குப் பிறந்தவர்களாக இருக்க முடியும் ? ‘பாரத மாதா’ வேண்டுமானால் எங்களுக்கு மாற்றாந்தாயாக இருக்கலாமே தவிர, நாங்கள் தமிழ்த் தாய் என்ற ஒரு தாய்க்குப் பிறந்தவர்கள். பாரதி சமஸ்கிருதத்தைப் போற்றினான். என்னதான் தமிழைப் பாடினாலும் கூட அவன் உள்ளத்தில் அடிநாதமாக இருந்த உணர்வு சமஸ்கிருதம் தான். வேதம் நிறைந்த தமிழ்நாடு என்று பாடுகிறான். நான் கேட்கிறேன், “தமிழ்நாட்டுக்கும் வேதத்துக்கும் என்ன தொடர்பு ?”

தமிழுக்கு இலக்கணம் வகுத்ததே ஆரிய மைந்தன் அகத்தியன் என்கிறான் பாரதி. அகத்தியனை ஆரிய மைந்தன் என்கிறான். அகத்தியன் வந்து இலக்கணம் வகுக்கும் வரை, தமிழ் ஆடையின்றி அம்மணமாகவா நின்றது ? தமிழுக்கு இலக்கணம் வகுத்தவன் தொல்காப்பியன். பாரதியோ, அகத்தியன் இலக்கணம் வகுத்தான் என்கிறான். நான் உறுதியாக சொல்வேன்; திராவிட இயக்கத்தின் கவிஞன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனே தவிர பாரதியாக இருக்க முடியாது. (கைதட்டல்) பாரதிதாசன் தமிழைத் தனது உயிருக்கு நிகராகக் கருதிய கவிஞன். அவன்தான் -

*“செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!*
*செயலினைமூச்சினை உனக்களித்தேனே!”* - என்று பாடினான்.

தமிழ்நாட்டில் மாற்றங்களுக்கு வித்திட்டது இரண்டு இயக்கங்கள்தான் என்பது எனது கருத்து. ஒன்று 500 ஆண்டுகாலம் நடந்த பக்தி இயக்கம்; பக்தி இயக்கம் பெரியார் இயக்கத்தைப்போல் ஜாதி ஒழிப்பைப் பேசவில்லை என்றாலும், சிவனை ஏற்றுக் கொண்டவர் எந்த ஜாதிக்காரராக இருந்தாலும் அவர்களைப் போற்றியது. சிவனை கடவுளாக ஏற்றுக் கொண்டவர் எந்த ஜாதியினராக இருந்தாலும் வணங்கத்தக்கவரே என்று அப்பர் பாடினார். சோழப் பேரரசு ஒன்று பிற்காலத்தில் உருவாக அடித்தளமிட்டது பக்தி இயக்கம் தான்.

பார்ப்பனரல்லாதார் உரிமைக்கு முதல் குரல் கொடுத்தவர் வள்ளலார். தனது தாயின் ‘யோனி’யிலிருந்து தன்னை முழுமையாக பிறக்க வைத்த இறைவனுக்கு ‘வந்தனம்’ (வணக்கம்) கூறிய வள்ளலார், ஆரிய வடமொழி மீது பற்று வைக்காமல், தமிழ் மீது பற்று வைக்கச் செய்த இறைவனுக்கு ‘வந்தனம்’ கூறுகிறார்.

அதே போன்று தமிழகத்தில் மற்றொரு இயக்கம் பெரியார் இயக்கம். அது ஜாதி ஒழிப்புப் பேசியது; சமூகயத்தைப் புரட்டிப் போட்டது; அதிகாரத்துக்குப் போகாமல் பேனா முனையில் சமூகத்தில் சிந்தனை மாற்றத்தை விதைத்தது பெரியார் இயக்கம். சமூகத்தை மாற்றியமைக்காமல் எந்தச் சட்டத்தையும் வெற்றிபெறச் செய்துவிட முடியாது. தான் பேசிய கொள்கையை தனது காலத்தில் வெற்றி பெற்றதை கண் எதிரில் கண்டு, தனது கொள்கை வெற்றிக்காக தனக்கு சிலை அமைக்கப்பட்டதை நேரில் பார்த்து மறைந்த தலைவர் பெரியார் ஒருவர்தான்” என்றார், பழ. கருப்பையா.

# ‘பசுக் காவலர்கள்’ பதில் சொல்வார்களா?

பசுவதையைக் கண்காணிப்பதாகக் கூறிக் கொண்டு, மதவெறி சக்திகள் வன்முறை வெறியாட்டம் போடுவது எல்லை மீறிப் போனதால், பிரதமர் மோடியே இதைக் கண்டிக்கும் சூழல் உருவாகி இருக்கிறது. நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் தொடங்குவதையொட்டி பிரதமர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ‘பசுவதைக் கண்காணிப் பாளர்கள்’ வன்முறையில் ஈடுபட்டால், மாநில அ ரசுகள் கண்டிப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மோடி அறிவுறுத்தியிருக்கிறார். நாடாளுமன்றத்தில் இது குறித்த விவாதங்கள் புயலை உருவாக்கிவிடக் கூடாது என்ற நோக்கத்தில் மோடி இவ்வாறு கூறினாரா அல்லது நாட்டில் சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும் என்ற நோக்கில் கூறினாரா என்பது ஒரு பக்கம் இருந்தாலும் மதவெறி சக்திகள் எல்லை மீறி செயல்படுகிறார்கள் என்பது மட்டும் உறுதியாகியிருக்கிறது.

அதே நேரத்தில் பசுவின் சாணி, மூத்திரம் ஆகியவற்றின் மருத்துவ குணம் குறித்து விஞ்ஞானபூர்வமாக ஆராய 19 பேர் கொண்ட குழு ஒன்றையும் மோடி ஆட்சி அமைத்திருக்கிறது. இதில் மூன்று பேர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்தவர்கள் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை அமைச்சர் ஹர்ஷவர்த்தன் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவில் துறைச் செயலாளர்களும் இடம் பெற்றுள்ளனர்.

மதச் சார்பற்ற ஆட்சி, மதம் சார்ந்த அறிவியலுக்கு எதிரான நம்பிக்கைகளுக்கு அரசு பணத்தை விரயம் செய்து வருவது வன்மையான கண்டனத்துக்கு உரியது. எந்த ஒரு பிராணியும் வெளியேற்றும் கழிவு சுகாதாரக் கேடானது என்பது அடிப்படையான அறிவியல்.

பசு மாடு மட்டுமே தனது உடல் உறுப்புகளின் வழியாக வெளியேற்றும் கழிவுகளில் மருத்துவ குணம் இருக்கிறது என்பதை எந்த மருத்துவமும் அறிவியல் ரீதியாக நிரூபிக்கவில்லை.

ஆனால், பார்ப்பனியம் ‘பசுவைத் தெய்வம்’ என்று கூறும் ஒரே காரணத்துக்காக, அரசுப் பணத்தை வீணடித்து நடப்பது ‘பார்ப்பன ராஜ்யம்’ என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
periyarmuzhakkam@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th July 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN